சார்பு நீதிமன்றம், இலால்குடி

முன்னிலை:– திருமதி.R.மோகனா, B.L.,

சார்பு நீதிபதி, இலால்குடி.

2024ம் ஆண்டு ஜூன் மாதம் 20ம் நாள் வியாழக்கிழமை

IA.No.3/2024 in OS.No.117/2020

(CNR.No. TNTP180003712020)

முனைவர் ஜகான் ...மனுதாரர்/வாதி

/எதிர்/

பாவா சாகிப் ..எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது 12.12.2023ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு 08.01.2024 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு 11.06.2024 ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்காக இந்நீதிமன்றத்தின் முன்பாக வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.அண்ணாதுரை அவர்கள் முன்னிலையாகியும், 8ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.சுப்பையா அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 7 எதிர்மனுதாரர்கள் தோன்றா தரப்பினராகிவிட்ட நிலையில் இருதரப்பு வாத உரைகளை கேட்டறிந்து, வழக்கு ஆவணங்களை பார்வையிட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் வைத்திருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

<u>உத்தரவு</u>

மனுதாரர்/வாதியால் சிவில் சீராய்வு மனு பிரிவு 75 மற்றும் உரிமையியல் விசாரணை முறை சட்டம் 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு மனுதாரரின் மூதாதையரால் ஸ்ரீரங்கம், சார்பதிவாளர் அலுவலகத்தில் 21.02.1919ம் தேதி



R MOHANA
Digitally signed by R MOHANA
Date: 2024.06.25 15:32:09 +0530

3 வது புத்தகம், பாகம் 21, பக்கம் 30–32 ஆவண எண் 9/1919 ஆக பதிவு செய்யப்பட்ட உயில் பத்திரத்தை பெற்றுத் தரக்கோரப்பட்டுள்ளது.

**2.** மனுவின் தமிழாக்க சுருக்கம் -

மனுதாரர் அசல் வழக்கின் வாதி ஆவார். வழக்கு சங்கதிகள் அனைத்தும் மனுதாரர்/வாதிக்கு நன்கு தெரியும். மனுதாரர்/வாதி தனது மூதாதையர் எழுதிக் கொடுத்த உயில் பத்திரத்தை பிரதிவாதியிடம் இருந்து பெற்றுத் தரக்கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி உயில் பத்திரம் 21.02.1919 ம் தேதி ஆவண எண். 9/1919, 3 வது புத்தகம், பாகம் 21, பக்கம் 30–32 ஆக ஸ்ரீரங்கம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதியப்பட்டுள்ளது. அந்த உயில் பத்திரம் இந்த வழக்கிற்கு முக்கிய ஆவணமாகும். எனவே, மாண்புமிகு நீதிமன்றம் மனுவை அனுமதித்து உத்திரவிட வேண்டப்படுகிறது. மாறாக தள்ளுபடி ஆகும் பட்சத்தில் மனுதாரருக்கு மிகுந்த கஷ்ட, நஷ்டம் உண்டாகும். எனவே, இம்மனு.

**3.** எதிருரையின் சுருக்கம் –

மனுவில் கண்டுள்ள அனைத்து விஷயங்களும் உண்மைக்கும் சட்டத்திற்கும் புறம்பானது ஆகும். இந்த எதிர்மனுதாரர் ஏற்றுக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்றவைகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். இந்த மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. மனு மற்றும் சத்தியபிரமாண வாக்குமூலத்தில் கண்ட குறுந்தலைப்பு மற்றும் தலைப்பு பகுதியில் வாதியின் பெயர் முனைவர் ஜஹான் என்பதற்கு பதிலாக பாவாசாகிப் என்று தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. சத்திய பிரமாண வாக்குமூலத்தில் கண்ட பத்தி 3–ல் தாவா சொத்து குறித்து வாதியின் மூதாதையர் வாதிக்கு பாத்தியப்படுத்தி உயில் எழுதி வைத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். மேற்படி



R MOHANA Digitally signed by R MOHANA Date: 2024.06.25 15:32:21 +0530

வாதியின் மூதாதையர் எழுதி வைத்த உயில் பற்றி தன்னுடைய வழக்குரையிலோ மற்றும் மேற்படி வழக்கில் தாக்கல் செய்த சத்தியபிரமாண நிரூபண முதல்நிலை வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு சொல்லாத நிலையில் இந்த மனுவை வாதி தாக்கல் செய்துள்ளது மேற்படி வழக்கில் வாதி தனக்கு சாதகமாக புதிய கட்சியை ஏற்படுத்துகிறார்.

4. <u>மனு அனுமதிக்கத்தக்கதா அல்லது இல்லையா ?</u> என்பதே இம்மனுவில் தீர்வு காண வேண்டிய பிரச்சனை ஆகும்.

5. **<u>தீர்வு</u> –**

மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் வழக்கு சொத்து மனுதாரரின் தகப்பனார் வழி பாட்டிக்கு பாத்தியமானது என்ற அடிப்படையில் 3ல் 1 பங்கு பாக உரிமை கோரி வாதி தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளதாகவும் மனுதாரர்/வாதியின் பாட்டிக்கு வழக்கு தபசில் சொத்து மனுவில் கூறப்பட்டுள்ள பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணத்தின் மூலம் பாத்தியப்பட்டதாக மனுதாரர்/வாதி வா.சா.1 ஆக அளித்துள்ள சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ளதால் மேற்படி ஆவணத்தினை வரவழைப்பதற்காக தற்போதைய மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் இவ்வழக்கினை தீர்வு காண்பதற்கு மிகவும் அவசியமானது என்பதால் மனுவினை அனுமதித்து உத்திரவிட வேண்டியது அவசியமானது என்று வாதிடப்பட்டது.

6. எதிர்மனுதாரர்/8ம் பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் வழக்கு தபசில் சொத்து மனுதாரர்/வாதியின் பாட்டிக்கு எவ்வாறு பாத்தியம் ஆனது என்பதை பொறுத்த வகையில் எவ்வித வாசகமும் குறிப்பிட்டு



R MOHANA Digitally signed by R MOHANA Date: 2024.06.25 15:32:38 +0530

கூறவில்லை என்றும் வாதி தரப்பு வழக்குரையிலும் எடுத்துரைக்காமல் தாவாவை பொறுத்து தாக்கல் செய்துள்ள தற்போதைய மனுவானது ஏற்கத்தக்கதல்ல என்றும் வாதி வா.சா.1 ஆக அளித்துள்ள சாட்சிய குறுக்கு விசாரணையில் மனுவில் கூறியுள்ள பதிவு செய்யப்பட்ட உயில் மனுதாரர்/வாதி வசம் இருந்ததாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள நிலையில் அதன் சான்றிட்ட நகலை பெற்று வழக்கில் தாக்கல் செய்து இருக்கலாம் என்றும் அது குறித்து இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இருந்துவிட்டு நீதிமன்றத்தின் மூலம் மேற்படி பதிவு உயில் ஆவணத்தினை வர வழைப்பதற்கு தாக்கல் செய்துள்ள மனுவில் மனுதாரருக்கு ஆதரவாக எவ்வித முகாந்திரமும் இல்லை என்பதால் மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்று வாதிடப்பட்டது.

7. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பார்வையிடப்பட்டன. அசல் வழக்கு பாக பிரிவினை பரிகாரம் கோரி மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/வாதி தரப்பு வழக்குபடி தாவா சொத்து மனுதாரர்/வாதியின் பாட்டிக்கு பாத்தியமான சொத்து என்றும் மனுதாரர்/வாதியின் பாட்டி விட்டுச்சென்ற சொத்திற்கு மனுதாரர் மட்டுமே வாரிசு என்பதால் அதற்குரிய பாக சொத்தில் மனுதாரருக்கு உரிமை இருப்பதாக கோரி தாவா வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி வா.சா.1 ஆக அளித்துள்ள சாட்சிய குறுக்கு விசாரணையில் "வாதியின் பாட்டி மதார் பீபிக்கு தாவா சொத்து எப்படி பாத்தியம் என்றால் சாகிதா முகமது மனைவி பாத்திமா அவரது மகள் ஆசான் பீபியை திருமணம் செய்து கொண்டதால் வந்த சொத்தாகும்" என்றும் "அவ்வாறு வந்த சொத்து ஆவணம் என் கைவசம் இருக்கிறது என்றால் சரி" என்று கூறி விட்டு பின்னர் "அந்த ஆவணம் என் கைவசம் இல்லை ஸ்ரீரங்கம் சார்பதிவாளர்



R MOHANA Digitally signed by R MOHANA Date: 2024.06.25 15:32:51 +0530

அலுவலகத்தில் இருக்கிறது" என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**8.** வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையில் வழக்கு தபசில் சொத்தில் வாதியின் தகப்பனார் வழி பாட்டி மதார் பீபிக்கு வழக்கு சொத்து பாத்தியம் ஆனது என்பதன் மூலம் மனுதாரர்/வாதிக்கு உரிமை இருப்பதாக கூறப்பட்டுள்ளது என்றாலும் எவ்வாறு வாதியின் பாட்டி மதார் பீபிக்கு தாவா சொத்து பாத்தியமானது என்பதை பற்றி எவ்வித வாசகமும் தாவா வழக்குரையிலோ வாதியின் முதல் விசாரணை நிரூபணத்திலோ எடுத்துரைக்கவில்லை. மேலும் மனுதாரர் மனுவில் கூறியுள்ள பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் யார் யாருக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்பதை பற்றி எவ்வித விளக்கமும் மனுவிலோ மனுதாரர் தரப்பு வழக்குரை சங்கதிகளிலோ எடுத்துரைக்காத நிலையில் மனுதாரர்/வாதி தனது கை வசம் கைத்திருந்த அசல் உயில் ஆவணம் பற்றி சாட்சியத்தில் கூறியுள்ளதாலும் அதற்கான சான்று நகலை வழக்குரையில் தாக்கல் செய்வதற்கு இதுநாள் வரை எவ்வித நடவடிக்கை எடுக்காமலும் தற்போது சார்பதிவாளர் அலுவலகத்தில் எவ்வித விண்ணப்பமும் கொடுக்காமலும் நேரடியாக நீதிமன்றத்தில் தாவா மனுவை தாக்கல் செய்துள்ள காரணத்தினால் தாவா மனுவில் மனுதாரருக்கு ஆதரவாக முதல் நோக்கு மற்றும் சமநிலை வாய்ப்பு இல்லை என்றே இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

**9**. மனுதாரர் தரப்பில் வழக்கு சொத்து குறித்து வா.சா.1 குறுக்கு விசாரணையில் கூறியுள்ளவாறு பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணத்தினை சார்பதிவாளர் அலுவலகத்தில் பெற்று தாக்கல் செய்ய வாய்ப்பு உள்ளது என்ற நிலையில் அதற்காக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து விட்டு அதனை பற்றி வழக்கைகுரையில் கூறாமல் தாவா மனுவினை மனுதாரர் தாக்கல்



R MOHANA Digitally signed by R MOHANA Date: 2024.06.25 15:33:02 +0530

செய்துள்ளார் என்பதாலும் பதிவு உயில் சாசனத்தின் சான்று நகலை பெற்றுக்கொள்ள மனுதாரருக்கு வாய்ப்பு உள்ளது என்பதாலும் தற்போதைய மனுவினை மனுதாரருக்கு எதிராக தள்ளுபடி செய்யலாம் என்று இந்த மனுவில் இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**இறுதியாக,** மனு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று **2024 ம் ஆண்டு ஜூன் மாதம் 20 ம் நாள்** அவையறிய பகரப்பட்டது.

R MOHANA
Digitally signed by R MOHANA
Date: 2024.06.25 15:33:11 +0530

சார்பு நீதிபதி,
இலால்குடி.

**<u>சான்றாவணங்களின் பட்டியல்</u>**

<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> – இல்லை

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்</u> – இல்லை

R MOHANA
Digitally signed by R MOHANA
Date: 2024.06.25 15:33:18 +0530

சார்பு நீதிபதி,
இலால்குடி.

Subordinate Court Lalgudi
IA.No.3/2024 in OS.No.117/2020
Draft / Fair Order
**<u>Date – 20.06.2024</u>**